01.08.2025– **எஸ்.சி 53/2013** – அ.சா.10 – சுப்பையா

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதிக்கப்பட்டார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ..11.07.2025 விசாரணைக்கு பிறகு இந்த வழககு சம்மந்தமாக தொடர்விசாரணையோ, உத்தரவாகவில்லை. என்னை விசாரணை அதிகாரி யாரும் விசாரிக்கவில்லை. நான் 30.7.2025 ம் தேதி சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு பார்வையிட்டேன். அதிக அக்கரை கொண்டதன் காரணம் கேள்விகளுக்கு சரியாக பதில் சொல்வதற்காக. கிறிஸ்தவர்களின் பெயர்களை முதல் விசாரணையிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. கிறிஸ்வர்களை பின்னால் விசாரிக்கவும் இல்லை அடையாளம் காணவும் இல்லை. போலிஸ் சட்டப்படி 30 (2) பிரிவில் துணை கண்காளிப்பாளர் பிறப்பித்த உத்தரவு மாவட்ட ஆட்சியரின்உத்தரவினையோ, தீர்ப்பினையோ, தொடர்ந்து அனுசரித்த உத்தரவு இல்லை என்றால் தெரியாது. முதல் விசாரணையில் தர்மலிங்கம் என்பவரை யார் , யாரிடம் தெரிந்து கொண்டேன் என்றால் மேல் அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அசோகன் என்ற மேலதிகாரியிடம்கேட்டு தெரிந்து கொண்டேன். அசோகன் என்பவருக்கு அனைவரையும் அடையாளம் தெரியும் என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்ச் தெரு என்று பெயர் பலகை இருந்ததை நான் எந்த இடத்திலும் பார்க்கவில்லை. சர்ச்சை சுற்றிலும் முன்பும், பின்பும் ஒரு 12 இந்து குடும்பங்கள் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது. கிறிஸ்தவர்கள் வீட்டில் கல் எறிந்த விவகாரத்தில் எங்களிடம் யாரும் புகார் அளிக்கவில்லை. சம்பவ

இடத்தில் போலிஸ் போட்டோ கிராப்பர் மற்றும் வீடியோ கிராபர் இருந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரித்த போது யார், யார் எறிந்த கல் யார் யார் மீது பட்டது என்ற விவரத்தை நான் சொன்னேன். எறிந்த கல்லில் பெயர் பொறிக்கபட்டிருந்தது என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. கற்கள் எந்த திசையில் இருந்து வந்தது என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. போலிஸில் உள்ள நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கால்களில் உள்ள காயங்கள் என்றால் கால், கை மற்றும் முகத்தில்காயம் ஏற்பட்டிருந்தது. அசோகன் ஆய்வாளர் அன்றைய தினம் தலை மற்றும் முககவசம் அணிந்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. போலிஸ் இந்த மாதிரியாக விஷயங்களுக்கு செல்லும்போது காவல்நிலையத்தில் இருந்து முககவசம், தலைகவசம் கொண்டு செல்லும் பழக்கம் உண்டு. ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியும். ஒவ்வொரு போலிசாருக்கும் முன்கால் , பின்காலில் ஏற்பட்ட காயத்தைநான் ஓடி ஓடி சென்று பார்க்கவில்லை. போலிஸ் என்னை விசாரிக்கும் போது யார் யாருக்கு எந்ததெந்த இடத்தில் காயம் பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை. காவல் சட்டம் 30 2 படி யான உத்தரவுஎந்த தேதியில் அமலில் இருந்து என்பது பற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சம்பவ தினத்தில் எதிரிகளுக்கு தலையில் காயம் பட்ட விவரம் எனக்கு தெரியாது. 4வது எதிரி தங்கராஜீக்கு தலை மற்றும் உடலில் முக்கிய பாகங்கள் முழுவதும் போலிஸ் லத்தியாலும் துப்பாக்கி முனைகளாலும் காயங்கள் ஏற்பட்டு அவர் அன்றைய தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்ட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது. தர்மலிங்கம் என்பவருர்கது தலையில் , உடலின் முக்கிய பாகங்களில் போலிஸாரின் ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்டு அவர் தீவிர சீகிச்சை பிரிவில்

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்ட்டது அந்த இருவருக்கும் ஏற்பட்ட காயங்கள் உயிரை மாய்க்கும் அளவுக்கு கொடுங்காயங்கள் ஆகும் கோவிலுக்கு சென்ற பெண்களுக்கும் போலிசாரால் கொடுங்காயங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெண்களும் விபத்து சிகிச்சை பிரிவில் அனுமதிக்கட்டிருந்த விவரம் எனக்கு தெரியாது. போலிசாருக்கு ஏற்பட்ட காயங்கள் தெரியும் எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் தெரியாது என்று சொல்வது உங்களுடைய இரட்டை நிலைப்பபாட்டை சொல்கிறது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு போலிசாரால் ஏற்பட்ட கொடுங்காயங்களை மறைப்பதற்காக போலிசாரே அவர் அவர் கால்களில் ஆய்வாளர் மற்றும் உயர் அதிகாரிகள் உத்தரவுக்கு இணங்க சுய காயங்கள் ஏற்படுத்தி மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டதாக போலியான ஆவணங்கள் ஏற்படுத்தப்ப்டடது என்றால் சரியல்ல. ஒரு காவல் நிலையத்தில் உள்ள நபரை வேறு பணிக்கு அனுப்ப போலிஸ் சட்டம் 42 படி தான் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அந்த பிரிவின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் உத்தரவு அனைத்திற்கும் உயர்அதிகாரிகளின் இசை பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். எந்த எழுத்துமூலமான உத்தரவுகளும் கிடைக்கபெறவில்லை என்றால் சரிதான். நான் அரசியல் காரணங்களுக்காக உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க போலிசார் அனைவரும் ஏற்படுத்திய கூட்டு சதியின் தொடர்ச்சியாக பிள்ளையார் புரம் ஊரில் இந்துகளுக்கும், அவரது உறவினராக கிறிஸ்தவர்களுக்கும் பகைமை ஏற்படுத்தி ஓட்டுகளை பிரித்து ஆளும்கட்சி அரசியலுக்கு துணை போனோம் என்றா்ல் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த பிரச்சனையும் இருதரப்பினர்களிடையே ஏற்படவில்லை என்றால் சரியல்ல.கோவிலில்

வருடா வருடம் திருவிழா நடைபெறும் என்றால் எனக்கு தெரியாது. எல்லா முறையும போல தான் திருவிழா கொடை அனைத்தும் முறைப்படி அழைப்பிதழ் அச்சிடப்பட்டு முறையாக உத்தரவு அனைத்தும் பெற்று தான் திருவிழா நடத்தப்படடது என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள எதிரிகள் அனைவரும் அந்த கோவிலில் அந்த கோவிலில் வழிபட வந்த பக்தர்கள் என்றால் சரியல்ல. அந்த கோவிலுக்கு பக்தர்கள் கிடையாது என்றால் உண்டு. எதிரிகள் அனைவரும் அந்த கோவிலில் வரி செலுத்துவரும் அவரது உறவினரும் என்றால் எனக்கு தெரியாது. அங்கு நடந்த நிகழ்வுகள் போலிசாரல் ஏற்படுத்தப்ட்டது என்பதால் தான் நாங்கள் வீடியோ எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணியில் இருந்த போலிசார்கள் சட்டத்திட்ட அடிப்படையில் உயர் அதிகாரிகளின் எழுத்து மூலமான உத்தரவு அடிப்படையிலும் பணி உத்தரவு வராததால் நாங்கள் அங்கு செய்த விஷயங்கள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. அன்றைய தினம் பத்திரிக்கை நிரூபர்கள் அங்கு இருந்தார்கள். பத்திரிக்கையில் அட்டை பகுதியில் அன்றையதினம் பிள்ளையார்புரம் ஊரில் போலிசார் ஆயுதங்கள் வைத்து பக்தர்களை தாக்கிய படம் தெரிகிறது. நாங்கள் 10 அடி துரத்தில் இருந்து சாதுரியமாக செயல்பட்டோம் என்று பேலிஸார் சாதுரியத்தை சொன்னேன் என்றால் சரிதான். போலிஸின் சாதுரியம் என்பது சட்டப்படி புலன்விசாரணை செய்வது தான் திறமை இவைகளை தான் குறிக்கும் என்றால் சரிதான்.நாங்கள் அங்கு மனித உரிமை மீறல்களை செய்தோம் என்றாலும் பக்தர்களை வீட்டில் இருந்து வெளியே வரமுடியாமல் போலிஸ் அடக்கு முறைப்படி சட்டத்திற்கு புறம்பாக அவர் அவர் வீட்டில் அடைத்து வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் இருந்து நான் எந்த கல்லையோ ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்றால்

சரிதான். நான் சொல்லும் நாள், நேரத்தில் நாங்கள் பந்தேபஸ்துக்கு சென்ற இடத்தில் நாங்கள் கிடையாது ் என்றால் சரியல்ல. எழுத்து மூலமான முன் அனுமதி இல்லாமல் வேறு வேலைகளுக்கு செல்ல முடியாது என்றால் சரியல்ல. கோவிலுக்கு பாதுகாப்பு எதுவும் போடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்ச்க்கும் தனியாக பாதுாப்பு எதும் போடவில்லை என்றால் எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் கோவில் பக்தர்களை தவிர வேறு யாரும் அந்த தெருவுக்குள் வரவில்லை என்றால் சரியல்ல. வருடாவருடம் கோவிலில் நடக்கும் திருவிழா மற்றும் அதை தொடர்ந்த சடங்குகள் தான் அங்கு நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அன்றைய டிஓஎஸ்பி ஸ்டெலின் மைக்கேல் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக மாவட்ட நிர்வாக நடுவர்களின் எழுத்துபூர்வமான உத்தரவு எதுவும் இன்றி அவராகவே மற்ற போலிசாரோடு கலந்து ஆலோசித்து கூட்டு சதி செய்து எவ்வித அவசியமும்இன்றி ஆயுதங்கள் பிரயோக படுத்தி பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் கொடுங்காயங்கள் ஏற்படுத்தி பொதுமக்ககளை பயமுறுத்தி வெளியே வரமுடியாமல் செய்து அடக்கு முறையே கையாண்டோம் என்றால் சரியல்ல. காயம் பட்ட பக்தர்களுக்கும் எதிரிகளுக்கும் போலிசார் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. காயம் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எதிரிகள் தொடர்பான காயங்களுக்கு மருத்துவமனையில் இருந்து போலிசாருக்கு இண்டிமேசன் வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்ற முறையில் மருத்துவமனையில் இருந்து இண்டிமேசன் பெறப்ட்டால் விசாரிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த நடைமுறைகள் இந்த வழக்கில் பின்பற்றப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கோவிலில்

இருந்து போய் இராஜாக்கமங்கலத்தில் மறுபடியும் பொறுப்பு எடுத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. யாரிடம்இருந்து பொறுப்பை பெற்றுக் கொண்டேன் என்ற விவரம் தற்போது ஞாபகம் இல்லை. ஆர்டிஓ 5.6.2008 மணிக்குதான் அங்கு வந்தார் என்றால் 4.6.2008 அன்று இரவு 10 மணிக்கு தான் அங்கு வந்தார். அதற்கு முன்போ போலிசார் அங்கு பந்தோபஸ்துக்கு போனார்கள். போலிஸ் பந்தேபஸ் ஆர்டிஓ வருவதற்கு எத்தனை மணி நேரத்திற்கு முன்பு போடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கிற்கு வேண்டி எதிரிகளை கஷ்படுத்தவேண்டி போலியான ஆவணங்களை உற்பத்தி செய்தும் சுய மேலேழுந்த காயங்களை உருவாக்கியும் அவைகளில் எதிரிகளின் பெயர்கள் இணைத்து அதிகார துஷ்பரோகம் செய்து சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டதால் எதிரிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல

ஏ 3, 6, 16, 21, 24, 26,27 ஆகிய எதிரிகள் தரப்பில் ஏற்கனே வசெய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக சொல்லப்படுகிறது.

ஏ 8, 14,15, 18, 19, 25, 28, 30, 31 தரப்பு குறுக்கு விசாரணை – பொதுவாக காவல்நிலையத்தில் 7 மணிக்கு ரோல் கால் தொடங்கும் . அன்றைய தினம் ரோல் காலில் ஒவ்வொருவரின் பணிகளும் குறிக்கப்படும். அன்றைய ரோல் காலில் அன்றைய தேதிய பணி குறிக்கப்படவில்லை. என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இடைப்பட்ட சிறப்பு பணிகள் வரும் போது காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் அது குறிக்கப்படும். எங்கள் காவல்நிலைய பொது நாடகுறிப்பில் சிறப்பு பணி குறித்து குறிக்கப்படும் அது படி தான் அந்த பணிக்கு சென்றோமா என்பது பற்றி உறுதி படுத்தப்படும். அதேபோல் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்ததால் பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அன்றைய பணி

குறித்து சொல்லகூடிய ஒரே ஆவணம் பொது நாட்குறிப்பு என்றால் பொது நாட்குறிப்பு மற்றும் தனிப்பட்ட நாட்குறிப்பு . இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி எனது தனிப்பட்ட டைரியை பார்த்தாக ஞுபாகம் இல்லை. அது சம்மந்தமாக என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை. அன்றைய தினம் கோவிலில் எடுக்கப்பட்ட சப்பரம் இடைவெளியிலே இறக்கி வைக்கப்பட்டுவிட்டது. டிஎஸ்பி ஸ்டாலின் அவர்களின் தனிப்படை போலிசார் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சப்ரம் கோவிலில் இருந்து எவ்வளவு துரத்தில் இறக்கிப்பட்டது என்றால் 200 அடி துரத்தில் இறக்கி வைக்கப்பட்டது. சப்பரத்திற்கு முன்னால் பெண் பக்தர்கள் பஜனை பாடி கொண்டு சென்றார்கள் என்றால் இல்லை. லத்தி ஜார்ஜ் செய்வதற்கு உத்தரவு கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அன்றைய தேதியில் என்னிடம் லத்தி இல்லை. நான் லத்தி ஜார்ஜ் பண்ணவும் இல்லை. லத்தி ஜார்ஜ் செய்த போலிசார் எந்த காவல் நிலையத்தை செர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. காயம்பட்ட நபர்கள் என்ன ஆனார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு லத்தி ஜார்ஜ் எப்படி பண்ண வேண்டும் என்று எனக்கு தெரியும். லத்தி ஜார்ஜ் செய்யும் போது காயம் பட்ட நபர்ககளை நாங்களே மருத்துமனையில் சேர்க்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் . அங்கு காயம் பட்ட நபர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்ட்டடார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக லத்தி ஜார்ஜ் துப்பாக்கிசூடு நடத்தப்பட்டால் ஆர்டிஓ விசாரணை நடக்கும் என்றால் சரிதான். அந்த விசாரணையின் போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிப்பார்கள் . இந்த சம்பவத்தில் என்னை ஆர்டிஓ விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் அன்றைய தேதியில் பணிக்கு சென்றதாக சொல்வது உண்மையல்ல என்றாலும் சம்பவம்

எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவசரமாக பொதுமக்களை தாக்கியதன் அடிப்படையில் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் நாங்கள் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. ஏ, 8,14,18,19 ஆகியோர் சம்பவ இடதத்தில் இருந்தார்கள் என்றும் ஏ 14 கல் எறிந்தார் என்று சொல்வது சரியல்ல . சம்பவம் நடந்து 17 வருடம் ஆகிறது. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.